2019 ஜூலை 12] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

அதேபோல, வன விலங்குகளால் விவசாயிகளெல்லாம் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். அது சம்பந்தமாக ஒரு நிரந்தரமான தீர்வை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

(இ) கேரளாவிற்கு புளியரை வழியாக வைக்கோலை தொடர்ந்து எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, வைக்கோலை கேரளாவிற்கு எடுத்துச் செல்லக்கூடிய பகுதி புளியரை. ஏனென்றால் வாசுதேவநல்லூர், வள்ளாலன்கோட்டை, குலசேகரமங்கலம், புளியரை வழியாகத்தான் செங்கோட்டையில் இருக்கக்கூடிய விவசாயிகள் 60 ஆண்டுகாலமாக வைக்கோல்களை கேரளாவிற்கு எடுத்துச்செல்கிறார்கள். இப்போது அதையும் எடுத்துச் செல்ல முடியாத அளவிற்கு காவல் துறையினரெல்லாம் அங்கே கெடுபிடி செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளின் நண்பனாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, கேரளாவிற்கு புளியரை வழியாக வைக்கோலை தொடர்ந்து எடுத்துச்செல்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.*

(ஆ) கம்பம் மற்றும் கடையநல்லூர் தொகுதிகள், வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர் சேதங்கள் குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி வனக் கோட்டம், உத்தமபாளையம் வனச் சரகத்தில் தேவாரம் பகுதியில் 6 காட்டு யானைகள், 20 ஆண்டு காலமாக சுற்றித் திரிவதோடு, வறட்சி காலங்களில் வனத்தை விட்டு வெளியே வந்து, வனத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிகள் மற்றும் விவசாய நிலங்களில் நுழைந்து சேதங்களை விளைவித்து வருகின்றன. இவ்வாறு காட்டு யானைகள் வனத்தை விட்டு வெளியே வந்து பட்டா நிலங்களில் புகுந்து தொல்லைதரும் காலங்களில், வருடந்தோறும் தனிக் குழுக்கள் அமைத்து அவற்றை வனத்திற்குள் திருப்பி*